


அவருக்கு வயது அறுபத்தொன்பது அல்லது எழுபத்தைந்து. இரண்டில் எது சரி என்று உறுதி செய்ய ஆள் கிடையாது. அவருடைய பாஸ்போர்ட், ஜனவரி 1, 1929 அன்று பிறந்தவர் என்று சொல்கிறது. அவரே ஒரு சமயம் தன்னுடைய பிறப்பு குறித்துப் பேசியபோது, 1938-ல் பிறந்ததாகக் குறிப்பிட்டார். சரிபார்க்க வாய்ப்பில்லை. பிறப்புச் சான்றிதழ், பள்ளிக்கூட டி.சி. என்று எந்த ஆவணமும் யாரிடமும் இல்லை.

நிறையப் படித்தவர். முதலில் இயற்பியல். அப்புறம் இறையியல். தத்துவம் கொஞ்சம். மருத்துவம் கொஞ்சம். கெய்ரோவில் உள்ள அல் அஸார் பல்கலைக் கழகத்தில் அவர் படித்துக்கொண்டிருந்த காலத்தில், பேராசிரியர்களின் கனவு மாணவர் அவர். நிறையக் கேள்வி கேட்பவர். நிறைய மார்க் வாங்குபவர். படிப்பைத் தவிர, வேறு எதிலும் ஆர்வம் காட்டாதவர். பெரும்பாலான நேரம் நூலகத்தில் செலவிடுபவர்.

பெரிய ஞானபண்டிதனாகப் போகிற மாணவர் என்றுதான், அவர்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். பாலஸ்தீனின் அரசியல் மற்றும் சமூகச் சூழ்நிலை, அவரை ஒரு போராளி ஆக்கிவிட்டது.

எண்பதுகளுக்குப் பிறகு, பாலஸ்தீன் போராட்ட சரித்திரத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் அவர் பெயர் உண்டு. சிவப்பு எழுத்துக்களால் ஆன பெயர். உச்சரிக்கும்போதெல்லாம், உதறல் எடுக்க வைக்கிற பெயர். துப்பாக்கிகள் மட்டுமே பரிச்சயமான இயக்கங்களுக்கு, சொந்தமாக ஏவுகணை என்று யோசனை அளித்து, சாத்தியமாக்கிய பெயர். அடிக்கிற ஒவ்வொரு அடியும் அசுர அடியாக இருக்கவேண்டும் என்று, திரும்பத் திரும்பச் சொல்லி, பிராந்தியத்தின் ஆயுததாரிகள் அத்தனைபேரையும் உசுப்பேற்றிய பெயர். மேற்கொண்ட ஒவ்வொரு தாக்குதலையும், வெற்றிகரமாக அமைத்துக்கொள்ள உத்வேகமளித்த பெயர்.

இத்தனைக்கும் அவரால் நடக்க முடியாது. முதுகுத் தண்டுவடத்தில் ஏற்பட்ட ஒரு பாதிப்பு, இடுப்புக்குக் கீழே வலுவாகப் பாதித்து, அவரது இரு கால்களும் செயல்படமுடியாத நிலைக்குப் போய்விட்டன. சக்கர வண்டியில்தான் போய்வரவேண்டும். தவிரவும் வயது கொண்டுவந்து சேர்த்த வண்டி சர்க்கரை வேறு கணிசமான பாதிப்புகளை ஏற்படுத்தி, முதிர்ந்த பருவத்தில் அவருக்குப் பார்வைக் குறைபாட்டை ஏற்படுத்தியிருந்தது. குறைபாடு என்று சொல்வது, அத்தனை பொருத்தமில்லை. கிட்டத்தட்ட முழுப்பார்வையுமே போயிருந்தது.

ஆனால், இதெல்லாம் அவரது இயக்கத்தையோ, செயல்பாடுகளையோ பாதித்ததில்லை. அதிகாலை மூன்று மணிக்கு எழுந்துவிடுவார். தொழுகைக்குப் பிறகு சில எளிய உடற்பயிற்சிகள். முடியும் நேரத்தில் மாணவர்கள் வந்துவிடுவார்கள். பிறகு தத்துவ வகுப்புகள். விவாதங்கள். குர் ஆனிலிருந்து மேற்கோள் காட்டிச் சொற்பொழிவுகள். முடித்ததும், உதவியாளர் வந்து அன்றைய தினசரிகள் அனைத்தையும் படித்துக் காட்டுவார். கேட்டுக்கொண்டே வரும்போது, சிலவற்றை அடிக்கோடு இடச் சொல்வார். பதில் சொல்லவேண்டிய அவசியமிருந்தால், அப்படியே டிக்டேட்

செய்வார். அரை தம்ளர் சர்க்கரை சேர்க்காத தேநீர் அருந்திவிட்டு, மசூதிக்குக் கிளம்பிவிடுவார்.

அவருக்குத் தொழுகை முக்கியம். வழிபாடு முக்கியம். நியதிகளை அவர் மாற்றிக்கொண்டதே இல்லை. 105 டிகிரி ஜுரம் அடித்த தினங்களில் கூட, அவர் மசூதிக்குப் போகாமல் இருந்ததில்லை.

அப்படிப் போன ஒரு தினத்தில்தான் எதிரிகள் அவரைக் குறிவைத்தார்கள்.

அன்றைக்கு மார்ச் 22-ம் தேதி. 2004-ம் வருடம். அவரது அதிகாலைத் தொழுகை நேரத்தை கவனித்துக் குறித்துக்கொண்டு, இஸ்ரேலியப் படையினர் ஹெலிகாப்டர்களுடன் காத்திருந்தார்கள். தொழுகை முடிந்து அவர் மசூதியை விட்டு வெளியே வரும்போது, எங்கிருந்தோ பறந்து வானிலிருந்து விழும் வேகத்துக்கு இறங்கிய ஒரு ஹெலிகாப்டரிலிருந்து ஏவுகணை பாய்ந்தது. AMG – 11 Hellfire என்கிற அமெரிக்க ஏவுகணை.

தொண்ணூறுகளின் தொடக்க தினங்களில் பனாமாவிலும் தொண்ணூற்றொன்றில் ஈராக்கிலும் பிறகு பல்வேறு இடங்களிலும், அமெரிக்கா மிக வெற்றிகரமாகப் பயன்படுத்திப் பரிசோதித்துப் பார்த்திருந்த ஏவுகணை அது. ஆட்களைக் கொல்வதற்காகத் தயாரிக்கப்பட்டது அல்ல. மிகப்பெரிய பீரங்கிகளையும் கனரக ராணுவ வாகனங்களையும் வீழ்த்துவதற்காக.

ஷேக் அகமது யாசின் என்கிற அந்த எழுபத்தைந்து வயது, கண் தெரியாத, நடக்கமுடியாத கிழவரைக் கொல்வதற்கு வெறும் துப்பாக்கிகளை நம்பிப் பயனில்லை என்று இஸ்ரேல் ராணுவம் நினைத்ததோ என்னவோ. AMG – 11 Hellfire ஏவுகணைகள் சரமாரியாக வீசப்பட்டன.

காஸா பகுதியின் அந்தக் காலைநேர அமைதி குலைந்துபோனது. பாய்ந்து வெடித்த ஏவுகணைகள், பிராந்தியத்தையே சின்னாபின்னப்படுத்திவிட்டன. யாசின் இறந்துபோனார். அவரது இரண்டு மெய்க்காப்பாளர்கள் தவிர, வேறு எட்டுப் பேரும் சம்பவ இடத்திலேயே சிதறிவிட்டார்கள். இன்னும் பல பேருக்குப் படுகாயம். காயமடைந்தவர்களுள் யாசினின் இரு மகன்களும் அடக்கம்.

பாலஸ்தீனியர்கள் பதறினார்கள். உலகம் அடுத்து என்ன நடக்கப்போகிறதோ என்று அச்சத்தில் ஒடுங்கியது. அவர்களுக்கு அகமது யாசினையும் தெரியும், அவருடைய ஹமாஸையும் தெரியும். கண்ணுக்கு Gun, பல்லுக்கு Bomb என்பது, அவர்களது சித்தாந்தம். சக்கரவண்டிக்கு ஏவுகணை வீசுகிறவர்கள் இல்லை அவர்கள். உசுப்பிவிட்டால், பதிலுக்கு அவர்கள் பாயும் வேகத்தை எதிர்கொள்ளவே முடியாது. கூட்டம் நிறைந்த பேருந்துகளில் ஒரு சிறிய குண்டு வைப்பார்கள். வண்டி, கூட்டத்தோடு கைலாயம் போய்ச் சேரும். சிதறிக் கிடக்கும் உடல்களில் ஹமாஸின் கோபத்தைப் புரிந்துகொள்ளலாம்.

முன்னதாக 2003, ஆகஸ்ட் 19-ம் தேதியன்று அப்படித்தான் ஜெருசலேம் நகரில், அவர்கள் ஒரு பேருந்தைக் குறிவைத்தார்கள். ஹமாஸின் பதின்மூன்று வீரர்களை இஸ்ரேலியப் படை கைதுசெய்து, சிறையில் தள்ளிவிட்ட கோபத்தின் வெளிப்பாடு அது.

அன்றைக்குச் செவ்வாய்க்கிழமை. காலை நேரம். தம் புனிதச் சுவரைச் சென்று தரிசித்துவிட்டு (அழுகைச் சுவர் என்றும் இதனைச் சொல்வார்கள். இந்தச் சுவரில் முகத்தைப் பதித்துக் கண்ணீர் விட்டு அழுதபடி பிரார்த்தனை செய்வது, யூதர்களின் வழக்கம். முன்னொரு காலத்தில் இருந்த யூத தேவாலயத்தின் ஒரே மிச்சம் அது என்பது, அவர்களது நம்பிக்கை. இது குறித்து முன்னர் 'நிலமெல்லாம் ரத்தம்' தொடரில் நிறைய பார்த்திருக்கிறோம், நினைவிருக்கிறதா?)
ஜெருசலேம்வாசிகளில் 160 பேர் அந்தப் பேருந்தில் வீடு திரும்பிக்கொண்டிருந்தார்கள். அத்தனை பேரும் யூதர்கள்.

Egged Bus Cooperative என்கிற இஸ்ரேலின் மிகப்பெரிய பேருந்து போக்குவரத்து

நிறுவனத்தைச் சேர்ந்த பஸ் அது.

புறப்பட்ட சிறிது நேரத்துக்கெல்லாம், வெடித்துச் சிதறிவிட்டது. ஏழு சிறுவர்களும் பதினாறு பெரியவர்களும் தலத்திலேயே மரணமடைந்தார்கள். தவிரவும் 130 பேர் உயிர் ஊசலாடிய நிலையில், மருத்துவமனைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள்.

அது ஒரு தற்கொலைத் தாக்குதல். நிகழ்த்தியது ஹமாஸ். இதற்காக மேற்குக் கரைப் பகுதி நகரமான ஹெப்ரானிலிருந்து (Hebron) ஹமாஸின் தற்கொலைப்படைப் போராளி ஒருவர் வரவழைக்கப்பட்டிருந்தார். இருபத்தொன்பது வயதே ஆன, ஒரு மதபோதகர் அவர். சம்பவத்துக்குப் பிறகுதான், அந்த இளைஞர் ஹமாஸ் உறுப்பினர் என்கிற விஷயமே வெளியே தெரிந்தது.

எத்தனை நாளாக அவர் ஹமாஸில் இருக்கிறார்? தெரியாது.

எங்கே பயிற்சி பெற்றார்? தெரியாது.

எப்போது ஹமாஸில் சேர்ந்தார்? யார் உந்துதல்? தெரியாது.

பிராந்தியத்தில் சாதுவான இளைஞர் என்று பெயரெடுத்தவர். தானுண்டு, தன் பணி உண்டு. ஆனால் உள்ளுக்குள் ஒரு கனல் இருந்திருக்கிறது. பெரும்பாலான பாலஸ்தீனிய இளைஞர்கள் அத்தனை பேர் மனத்துக்குள்ளும், அணையாமல் தகித்துக்கொண்டிருக்கிற கனல். அங்கே அத்தகைய கனலை ஊதி விட்டுப் பெரிதாக்கும் இயக்கங்கள் நிறைய இருக்கின்றன.

ஹமாஸ் தலையாயது.

வெறும் பதின்மூன்று போராளிகள் கைதுக்கே இப்படியொரு எதிர்வினை என்றால், இயக்கத்தின் மிகப்பெரிய தலைவரான ஷேக் அகமது யாசினை ஏவுகணை வீசிக் கொன்றிருக்கிறார்கள் என்பதற்கு என்ன பதில் சொல்வார்களாயிருக்கும்?

அதற்காகத்தான் உலகம் அஞ்சியது. பாலஸ்தீனியர்கள் பயந்தார்கள். இஸ்ரேலிய யூதர்கள் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஒடுங்கி நின்றார்கள்.

அப்போதைய இஸ்ரேலிய அதிபர் ஏரியல் ஷரோன், அபத்தமாக ஓர் அறிக்கை விடுத்தார். 'கண்டிப்பாக அது யாசினுக்குக் குறிவைக்கப்பட்ட ஏவுகணை அல்ல. நிகழ்ந்தது ஒரு விபத்துதான். கொலை உத்தேசங்கள் ஏதுமில்லை.'

இதைக்காட்டிலும் அபத்தம் இருக்கமுடியுமா? இன்னும் பயந்தார்கள்.

ஹமாஸ் கொதித்தது. எதையும் பேசிக்கொண்டிருக்கவே அவகாசமில்லாத நெருக்கடி. யுத்தத்தில் தோற்பது கூடப் பெரிய விஷயமில்லை. துடைத்துப் போட்டுவிட்டு, அடுத்த வெற்றிக்கு உழைக்கத் தொடங்கிவிடலாம். ஆனால், தலைவனை இழப்பது என்பது சாதாரணமல்ல. அதுவும் யாசின், ஹமாஸின் முதல் ராணுவத் தலைவர். நிகரற்ற தளபதி. அவரது வருகைக்கும் ஈடுபாட்டுக்கும் முன்னால் ஹமாஸில் யாருக்கும் துப்பாக்கி என்ன கலர், என்ன சைஸ் என்று கூடத் தெரியாது. ஓர் அரசியல் இயக்கமாக வந்திருக்கவேண்டியது. அல்லது ஒரு சமூக இயக்கமாக. அல்லது காணாமல் போயிருக்கும். பாலஸ்தீனில் அம்மாதிரி காணாமல் போன இயக்கங்களும் அநேகம் உண்டு.

வெறும் அரசியல் ஆர்வலர்களாக இருந்த ஹமாஸின், தொண்டர்களுக்குப் போர்ப்பயிற்சி அளித்து, முறையான ராணுவ வீரர்களாக உருமாற்றியவர் அகமது யாசின் தான். பாலஸ்தீனில்

யாசிர் அராஃபத்தும் அவரது மதச்சார்பற்ற அல் ஃபத்தா இயக்கமும் மிகப்பெரிய சக்திகளாக உருவெடுத்துக்கொண்டிருந்த நேரத்தில், அரசியல் லாபங்களுக்காக மத அடையாளங்களை விட்டுக்கொடுக்க முடியாது என்கிற கோஷத்துடன், குர் ஆன் பிரதியையும் கைத்துப்பாக்கியையும் இரு கரங்களில் ஏந்திய ஹமாஸ் போராளிகளை அதற்கான ஓர் அடையாளச் சின்னமாக முன்னிலைப்படுத்தியவர் யாசின்.

சந்தேகமில்லாமல் அவர் ஒரு சக்தி. ஒரு விசை. காஸா பகுதியில் அவர் விரலசைத்தால், எதுவும் நடக்கும். வேறு விதமாகவும் சொல்லலாம். அவர் விரலசைத்தால்தான் எதுவும் நடக்கும். அவசர அவசரமாக ஹமாஸின் உயர்மட்டத் தலைவர்கள் ஒன்று கூடி, தம் அடுத்த தலைவரைத் தேர்ந்தெடுத்தார்கள். டாக்டர் அப்துல் அஜிஸ் அல் ரண்டிஸி (Dr. Abdul Aziz alRantissi).

டாக்டர் ரண்டிஸி, யாசினின் இளமைத் தோழர். இருவரும் இணைந்துதான் ஹமாஸுக்கு உருவம் கொடுத்தார்கள். இஸ்ரேலை எதிர்க்கிற விஷயத்தில் யாசினைக் காட்டிலுமே ஒருபடி மேலானவர். யாசினாவது இஸ்ரேல் ஏதாவது சமரசத் திட்டங்களை முன்வைத்தால் படித்துப் பார்த்து நிராகரிப்பார். டாக்டர் ரண்டிஸி, அப்படியே தூக்கிக் குப்பைக் கூடையில் போடுகிற தீவிரர்.

யாசினுக்குப் பிறகு ரண்டிஸி ஹமாஸின் தலைவர் ஆனதும், சுமார் ஒரு மாத காலத்துக்கு அவர் வெளியே வரவேயில்லை. பாதுகாப்புக் காரணங்கள். ஆனால் அவர் பேசாமல் இல்லை. செயல்படாமல் இல்லை. மார்ச் 27-ம் தேதியன்று திடீரென்று காஸாவில் கூடிய ஒரு மாபெரும் கூட்டத்தில் யாருமே எதிர்பாராதவிதமாக வருகைதந்து மேடையேறிய ரண்டிஸி, அமெரிக்க அதிபரை, முஸ்லிம்களின் மிகப்பெரிய எதிரி என்று வருணித்தார்.

'அமெரிக்கா அறிவித்திருப்பது, தீவிரவாதத்துக்கு எதிரான யுத்தமல்ல. கடவுளுக்கு எதிரான யுத்தம். ஆகவே, ஏரியல் ஷரோன் நடத்துவதும் கடவுளுக்கு எதிரான யுத்தம். நான் சொல்கிறேன். கடவுளும் ஒரு யுத்தம் அறிவித்திருக்கிறார். அமெரிக்காவுக்கும் புஷ்ஷுக்கும் ஷரோனுக்கும் எதிரான யுத்தம்.'

ரண்டிஸியின் பேச்சு இப்படித்தான் இருக்கும்.

சி.ஐ.ஏ., யோசித்தது. அவர்கள் இஸ்ரேலிய உளவு அமைப்பான மொசாடுடன் கலந்து பேசினார்கள். இவர் யாசினைக் காட்டிலும் ஆபத்தானவர்.

சரியாக ஒரு மாதம் கூட ஆகியிருக்கவில்லை ஏப்ரல் 17-ம் தேதியன்று ரண்டிஸியும் அவரது மகனும் காரில் போய்க்கொண்டிருந்தபோது, அடித்துவிட்டார்கள். அதே பாணி ஏவுகணைத் தாக்குதல்.

அவ்வளவுதான், இதற்குமேல் பொறுமை காப்பதில் அர்த்தமில்லை என்று ஹமாஸ் முடிவு செய்தது. கவசம் தரித்துக்கொண்டு எழுந்தார்கள். அப்புறம் நிகழ்ந்த எதுவும் அத்தனை சுலபத்தில் மறந்துவிட முடியாதவை.